நாள் **-27.01.2025**

**O.S.No.173/2004    P.W. 2**

பெயர்  -   திருமதி அம்ஸத் ராணி

( சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

குறுக்கு விசாரணை **(2** முதல் **7** பிரதிவாதிகள்  தரப்பில்**) -**

மேற்படி வாதாசாஆ-8 ஆன பிறப்பு சான்றிதழை என்னுடைய சாட்சியத்தை இந்நீதிமன்றத்தில் ஏற்றிய பிறகு நான் பெற்றேனா என்றால் இல்லை. நான் சாட்சியாக ஏறுவதற்கு முன்பாவே வாங்கிவிட்டேன். என்னுடைய பள்ளி மாற்று சான்று மற்றும் மார்க் சீட் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது தற்போது என் கைவசம் இல்லை. மேற்படி பள்ளி மாற்று சான்று மற்றும் மார்க் சீட் ஆகியவை என்னிடம் தான் உள்ளது என்றும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்னுடைய உண்மையான வயது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய திருமண நிக்கா சான்றிதழ் பள்ளிவாசலில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும் அதை தாக்கல் செய்ய என்னால் முடியுமா என்றால் முடியும். வாசாதாஆ-8 ஆன ஆவணம் என்னுடைய சாட்சியத்திற்கு பிறகு என்னால் உருவாக்கப்பட்ட

பொய்யான ஆவணம் என்பதால் தான் உரிய காலத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒப்பம் - அம்ஸத் ராணி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi.
முதன்மை மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ).
மதுரை.